**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110295

1. District மாவட்டம்: KARUR PS காவல்நிலையம்: V & AC Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 01/AC/2021 Date நாள்: 07.01.2021

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: ACT 1988 AS AMENDED Sections பிரிவுகள்: 7(b)
(iii) Act சட்டம்: IN 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல்: 04.01.2021 17.00 மணி Date to நாள் வரை: 05.01.2021 09.00, 12.20, 06.01.2021 17.00 மணி
Time Period நேர அளவு : Time from நேரம் முதல்: நேரம் Time to நேரம் வரை: 17.00 மணி நேரம் மற்றும் அலுவலக நேரம்
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 06.01.2021 Time நேரம் : 19.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 07.01.2021 Time நேரம் : 06.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: உதவி மின்பொறியாளர் அலுவலகம்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி: இயக்கமும் காத்தலும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மண்மங்கலம் கரூர். மேற்கு 5 km வடக்கு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: N. செந்தில்குமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: S. நல்லுசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 17.07.1985
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்: கட்டிடனை
(g) Address : முகவரி: D.NO. 79. வெள்ளாளர் தெரு. பசுபதிபாளையம் காதப்பாறை கிராமம். மண்மங்கலம் தாலுக்கா கரூர் மாவட்டம் 639006.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. குணசேகரன். போர்மேன். உதவி மின்பொறியாளர் அலுவலகம் இயக்கமும் காத்தலும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மண்மங்கலம், கரூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any :
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக கு.எண் 01/AC/2021 U/S 7(b) PREVENTION OF CORRUPTION ACT 1988 AS AMENDED IN 2018 தொடர்பு தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N. [signature] 7/1/2021 [signature] 7/1/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07.01.2021. 06.45 Hrs.

Name: பெயர் A. RAJANAKUMAR ...........................
Rank: நிலை ...................... No. எண் ..........
INSPR VAC, KARUR.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No 1/AC/2021 u/s 7(b) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் அ.பிரசன்ன வெங்கடேஷ் ஆகிய நான் 06.01.2021 ம் தேதி 19.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு.N.செந்தில்குமார், த/பெ.S.நல்லுச்சாமி, Door. No.79, வெண்ணமலை பசுபதிபாளையம், காதப்பாறை கிராமம், மண்மங்கலம் தாலுகா, கரூர் மாவட்டம்-639006 என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் திரு.N.செந்தில்குமார், த/பெ.S.நல்லுச்சாமி, Door.No.79, வெண்ணமலை பசுபதிபாளையம், காதப்பாறை கிராமம், மண்மங்கலம் தாலுகா, கரூர் மாவட்டம்-639006 பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, வடிவேல் நகர், கரூர். அய்யா, நான் மேற்சொன்ன முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கட்டடகலையில் இளங்கலை பட்ட படிப்பு படித்துள்ளேன். காதப்பாறை கிராமம் சர்வே எண்.121(1) மற்றும் 122/2F (1A) ல் லட்சுமி நகரில் 3 ஏக்கர் நிலம் என் அப்பா பெயரில் உள்ளது. அதில் சர்வே எண்.121(1) ல் சுமார் 2 ஏக்கர் விவசாய நிலம் பூர்வீகமாக உள்ளது. சர்வே எண்.122/2F (1A) ல் சுமார் 1 ஏக்கரை 26 மனை பிரிவுகளாக என் தந்தை மூலம் பிரித்து அதில் 23 மனைகள் விற்கப்பட்டுள்ளது. விற்காத மனை எண் 19 ல் LT மின் கம்பம் மற்றும் கம்பி வழித்தடம் சென்றது. எனவே, மனை எண் 19 ல் LT மின் கம்பம் மற்றும் கம்பி வழித்தடத்தை ரோடு வழியாக மாற்றி அமைத்து தர வேண்டி கடந்த 05.12.2020 அன்று மனு ஒன்றை திரு.சந்தானகண்ணன், உதவி மின்பொறியாளர், இயங்கலும் காத்தலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், மண்மங்கலம், அவர்களிடம் கொடுத்தேன். பின்னர் 09.12.2020 அன்று A.E. மற்றும் மின்சார அலுவலக ஊழியர்கள் எனது இடத்தை வந்து பார்வையிட்டு, மதிப்பீடு தயார் செய்த பின், தகவல் தெரிவிப்பதாக கூறி சென்றார்கள். ஆனால் எனக்கு தகவல் வராததால், நான் கடந்த 29.12.2020 அன்று காலை, உதவி மின்பொறியாளர், மண்மங்கலம் சென்று, வணிக உதவியாளர் திரு.வேலு அவர்களை, சந்தித்து விபரம் கேட்டேன். அவர் மதிப்பீட்டு தொகை ரூ.38240/- வங்கி வரைவோலையாக செலுத்துமாறு தெரிவித்தார். நானும் அன்றைய தினமே கரூர் வைஸ்சியா பேங்க், வெங்கமேடு கிளையில் ரூ.38240/- ஐ செலுத்தி வங்கி வரைவோலையாக (எண்.045329) நாள் 29.12.2020 பெற்று, 30.12.2020 ஆம் தேதியன்று, உதவி மின்பொறியாளர், மண்மங்கலம் அலுவலகத்தில் கொடுத்து ரூ.38240/-க்கான மின்கட்டண ரசீது பெற்றேன். பின்னர் 04.01.2021 அன்று காலையில் போர்மேன் திரு.குணசேகரன் அவருடைய செல்போன் எண் 9894969566 லிருந்து என்னுடைய செல்போன் எண் 9600966047 க்கு கூப்பிட்டு மின்கம்பத்தை பிடிங்கி மாற்றி அமைக்க வேலைக்கு வருவதாகவும், அதற்கு JCB

ரெடி பண்ணிட்டு ஆபிசுக்கு வரச்சொன்னார். நான் அவர் சொன்னது போலவே சுமார் 12.00 மணியளவில் மண்மங்கலம் உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு JCB உடன் சென்றேன். அங்கு மின் கம்பம் மற்றும் கம்பிகள் சாமான்களை ஆகியவற்றை JCB யில் எடுத்துக்கொண்டு, மதியம் சுமார் 02.00 மணியளவில் என்னுடைய இடத்திற்கு சென்றோம். அங்கு போர்மேன் மற்றும் மின் ஊழியர்கள் என்னுடைய இடத்திற்கு வந்து LT மின் கம்பம் மற்றும் கம்பி வழித்தடத்தை ரோடு வழியாக மாற்றி அமைத்து கொடுக்கும் வேலையை செய்தார்கள். வேலையை முடித்துவிட்டு மாலை சுமார் 05.00 மணியளவில் போர்மேன் திரு.குணசேகரன் என்னிடம் ரூ.8000/- வேலை செய்து கொடுத்ததற்காக தனக்காகவும், ஆட்களுக்கு வேண்டும் என்று சொல்லி பணம் கேட்டார். நான் தற்போது என்னிடம் பணம் ரூ.4000 மட்டுமே இருக்கிறது என்றும், ஏற்கனவே எஸ்டிமேட் தொகையை கட்டிவிட்டதால் கையில் பணம் நான் வைத்திருக்கவில்லை என்றும் சொன்னேன். அதற்கு அவர் தற்போது உன்னிடம் உள்ள பணத்தை உடனே கொடு என்று கேட்டு வற்புறுத்தி என்னிடமிருந்த ரூ.4000/- வாங்கிக் கொண்டார். அப்போது என்னிடம் அவர் மீதி பணத்தை நாளைக்கு காலையில் ஆபிசுக்கு கொண்டு வந்து என்னிடம் கொடு இல்லை என்றால் இனிமேல் உனக்கு எந்த வேலையும் செய்ய ஆபிசிலிருந்து ஆட்கள் வரமாட்டார்கள் என்று மிரட்டலாக சொல்லிவிட்டு போனார். அதன் பின் நான், 5.1.2021 காலை சுமார் 09.00 மணியளவில் அவருடைய ஆபிசுக்கு போனேன். அப்போது போர்மேன் திரு.குணசேகரன் நான் கேட்ட பணம் ரூ.4000/- என்னாச்சு என்று என்னிடம் கேட்டார். நான் ஏற்கனவே நிறைய செலவு செய்துவிட்டேன். மறுபடியும் எதற்கு பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் வேலை முடிஞ்சு போச்சுனு இப்படி பேசறையா இனிமேல் உன் வீட்டிற்கு வேற வேலைக்கு EB ஆபிசிலிருந்து ஆட்கள் வரமாட்டாங்க என்று மிரட்டினார். அதனால் நான் அவரிடம் நீங்கள் கேட்ட பணத்தை கொஞ்சம், குறைச்சுக்கங்க என்று சொன்னேன். உடன் போர்மேன் திரு.குணசேகரன், ஏற்கனவே கம்மியாக சொல்லியிருக்கேன் சரி 500 குறைத்து ரூ.3500/- ஐ கொடு என்று கேட்டார். நான் இப்போது பணம் என்னிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பணத்தை போய் ரெடிபண்ணிக்கிட்டு வா என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன் பிறகு நான் கரூர் டவுனில் இருந்த போது போர்மேன் எனக்கு இரண்டு முதல் மூன்று முறை செல்போனில் கூப்பிட்டார். என்னால் எடுக்க முடியவில்லை. அதன் பிறகு நான் பகல் சுமார் 12.20 மணிக்கு செல்போனில் அவரை கூப்பிட்டேன். அப்போது அவர் பணம் என்னாச்சு என்று கேட்டார். நான் ரெடிபண்ணிக்கிட்டு கூப்பிடுகிறேன் என்று சொல்லிவிட்டு வைத்துவிட்டேன். அதன் பிறகு மாலை சுமார் 5.45 மணிக்கு நான் அவரிடம் பணம் ரெடிபண்ணமுடியவில்லை என்ற விபரத்தை சொல்ல அவரை செல்போனில் கூப்பிட்டேன். அப்போது என்னால் தெளிவாக பேச முடியவில்லை. உடனே அவர் கட்பண்ணிவிட்டு என்னுடைய லயனுக்கு வந்து பணம் என்னாச்சு என்று கேட்டார். நான் இன்று பணம் ரெடிபண்ண முடியவில்லை நாளைக்கோ அல்லது நாளை

மறுநாளோ பணம் ரெடிபண்ணிவிட்டு கூப்பிடுகிறேன் என்று சொன்னேன். அவர் நாளைக்கு பணத்தை கொடு என்று சொல்லிவிட்டு வைத்துவிட்டார். அதன்பிறகு இன்று 6.1.2021 மாலை சுமார் 5.10 மணிக்கு மீண்டும் போர்மேன் திரு.குணசேகரன் என்னை கூப்பிட்டு பணம் என்னாச்சு என்று கேட்டார். நான் பணம் ரெடி பண்ணமுடியவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பணம் ரெடிபண்ணிக்கிட்டு நாளைக்கு காலையில அலுவலகத்திற்கு வந்து கொடு இல்லையினா EB ஆபிசிலிருந்து இனிமேல் உனக்கு எந்த வேலையும் நடக்காது, சலுகையும் கிடைக்காது என்று மிரட்டினார். எனக்கு போர்மேன் திரு.குணசேகரனுக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ஏற்கனவே 4 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கியதற்காகவும், மறுபடியும் ரூ.3500/- லஞ்சம் கேட்டு தொந்தரவு செய்யும் மண்மங்கலம் உதவி மின் பொறியாளர் அலுவலக போர்மேன் திரு.குணசேகரன் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள Sd/- XXXXXXXXXX (N.Senthilkumar) 7/1/2021.

Sir, Received the above said written complaint on 06.01.2021 at 19.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.01/AC/2021 u/s 7(b) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 06.00 hrs today on 07.01.2021. Sd/- (xxxxxxxx) 07.01.2021 A.Prasanna Venkatesh, Insp. of Police, V & AC, Karur.

Original FIR along with the original written complaint of Tr.N.Senthilkumar, S/o.S.Nallusamy, Door No.79, Vennamalai Pasupathypalayam, Kathaparai Village, Manmangalam Taluk, Karur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(A.Prasanna Venkatesh)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.